## பரீட்சை மீதியின் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தாத வழுக்கள்.

- வழுக்கள் ஏற்பட்டிருந்தும் கூட பரீட்சை மீதியில் வரவு நிரலின் கூட்டுத்தொகை செலவு நிரலின் கூட்டுத் தொகைக்குச் சமமாகக் காணப்படுமாயின் இவை **பரீட்சை மீதி வெளிக்காட்டாத வழுக்கள் ஆகும்**.

**பயிற்சி 1**

ராணி வணிகத்தின் 2020.05.30 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு, செலவு மீதிகளின் கூட்டுத்தொகை சமமாகக் காணப்பட்டாலும் பின்னர் கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டது.

1) கஜனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருள்பட்டியல் ரூபா 16000 கணக்கேடுகளில் முழுமையாக விடுபட்டிருந்தது.

2) ரமேஷிடம் கொள்வனவு செய்த பொருள்பட்டியல் ரூபா 7500 தவறுதலாக **சுரேசின்** கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது

3) இயந்திரக் கொள்வனவு ரூபா 50,000 தவறாகக் தளபாடக் கணக்கில் வரவு வைக்கபட்டிருந்தது.

4) ரூபா 15000 க்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருள்பட்டியல் ரூ 1500 என கொள்வனவு நாட்குறிப்பில் பதியப்பட்டுள்ளது.

5) கடன்பட்டோர் கணக்கும், கடன் கொடுத்தோர் கணக்கும் ரூபா 6800 இனால் அதிகரித்து கூட்டப்பட்டுள்ளது.

6) மின்சாரக் கட்டணம் ரூபா 5600 கணக்குகளில் இருந்து முழுமையாக விடுபட்டிருந்தது.

7) **ரோஹிணிக்கு** விற்பனை ரூபா 20,000 விற்பனை நாளேட்டின் ரூபா 2000 என பதியப்பட்டிருந்தது.

8) ரூபா 30,000 பெறுமதியான கொள்வனவுப் பட்டியலொன்று கணக்கேடுகளில் இருமுறை பதியப்பட்டிருந்தது.

9) ராணியின் சொந்த தேவை கருதி வணிகத்தில் இருந்து பெற்றுக் கொண்ட ரூபா 4500 பெறுமதியான பொருள்கள் புத்தகங்களில் பதியப்படவில்லை.

10) வட்டி வருமானமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 5000 கணக்குகள் இருமுறை பதியப்பட்டிருந்தது.

மேற்காட்டப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான பொது நாட்குறிப்பேட்டினைத் தயாரிக்கவும்.

**பயிற்சி**

பாடப்புத்தகத்தில் உள்ள செயற்பாடு 01 மற்றும் 02 ஐ செய்க (பக்கம் 185)